**செய்தி வெளியீடு எண்: 107** **நாள் : 12.3.2015**

## செய்தி வெளியீடு

**<u>மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் திரு B V ரமணா அவர்கள் தலைமையில் பால் வள செயல் திட்டங்கள் குறித்த ஆலோசனைக்கூட்டம்</u>**

**மாண்புமிகு புரட்சித் தலைவி ''அம்மா''** அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பால்வளத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், 2015–16ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர் **திரு B V ரமணா** அவர்கள் தலைமையில் இன்று (12.03.15) ''ஆவின் இல்லம்'' மாதவரம் பால் பண்ணையில், ஆவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு கால்நடை பராமரிப்பு, மீன்வளம், மற்றும் பால்வளத்துறை அரசு செயலர் முனைவர் திரு ச.விஜயகுமார், இ.ஆ.ப., பால் வளத் துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப. முன்னிலை வகித்தார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தை, பால் உற்பத்தியில் முதன்மை மாநிலமாக திகழச் செய்யவும், இரண்டாவது வெண்மைப்புரட்சியை ஏற்படுத்தவும் **மாண்புமிகு புரட்சித் தலைவி ''அம்மா''** அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வரும் தமிழக அரசு பல்வேறு பால் வளத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஆவின் பால் கொள்முதல் முன் எப்பொழுதும் இல்லாத அளவில் 28.01.15 அன்று **27.39 இலட்சம் லிட்டர் என்ற இலக்கினை அடைந்து, சரித்திர சாதனை நிகழ்த்தியுள்ளது.** சராசரியாக நாளொன்றுக்கு 26.50 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் **மாண்புமிகு புரட்சித் தலைவி ''அம்மா''** அவர்களின் உத்தரவின்படி இரண்டாவது வெண்மைப்புரட்சி தமிழகத்தில் விரைவில் ஏற்பட பால்வளத்திட்டங்கள் குறித்த காலங்களில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், பால் கொள்முதல் நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டராக அதிகரிக்க கூட்டுறவு அமைப்பின் கீழ்செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு ஆவின் நிறுவனம்

அளித்துவரும் மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல் மற்றும் கால் நடைத் தீவனத்திற்கு மானியம் அளிப்பது ஆகியவை குறித்த தகவல்களை களப்பணியாளர்கள், பால் உற்பத்தியாளர்களுக்குத் தெரிவித்து அவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிக அளவில் பால் வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், நலிவுற்ற சங்கங்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் மற்றும் புதிய சங்கங்கள் தொடங்கப்படவேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பால் கொள்முதல் அதிகரித்துள்ள நிலையில் பால் விற்பனையை அதிகப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. தற்பொழுது, பால் விற்பனை சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 11.67 இலட்சம் லிட்டராகவும், இதர மாவட்டங்களில் நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டராகவும் உள்ளது. மேலும், பால் விற்பனையை வரும் மார்ச் 2016-க்குள் சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டராகவும், இதர மாவட்டங்களில் நாளொன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்,

நுகர்வோர்களுக்கு மாதாந்திர பால் அட்டைகள் உடனடியாக வழங்கப்படவேண்டும், புறநகர் பகுதிகளில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புக்களை கணக்கெடுத்து அங்கு உடனடியாக பால் அட்டைகள் வழங்கவும், சமையல் தொழில் ஒப்பந்ததாரர்களை சந்தித்து அவர்களுக்குத் தேவையான பாலை மொத்தமாக வழங்கவும், பல்வேறு பெரிய நிறவனங்களுக்குச் சென்று அங்கு செயல்படும் உணவகங்களுக்குத் தேவையான ஆவின் பால் மற்றும் பால் பொருட்களை வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த கூட்டத்திற்கு துணைப் பால் ஆணையர் திரு எஸ்.துரைசாமி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பொது மேலாளர் (பணிக்குழு) திரு பி. பிரபாகர், கூடுதல் இயக்குநர் திரு எஸ்.ஜெயக்குமார், பொதுமேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே. கதிர்வேலு, பொதுமேலாளர் (திட்டம்) திரு சி.லோகிதாஸ் மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**